[1972 மார்ச் 14

மாநில பனைவெல்ல கூட்டுறவுச் சம்மேளனம்

*490. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுவிலக்கு நமது மாநிலத்தில் ஒத்திவைக்கப்பட்ட பிறகு பதநீர் இறக்கும் தொழிலைக் கொண்டிருக்கின்ற "மாநில பனை வெல்ல கூட்டுறவுச் சம்மேளனத்தை" கலைக்க அரசு முடிவெடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, நமது மாநிலத்தில் மதுவிலக்கு எடுக்கப்பட்டதன் காரணமாக பதநீர் இறக்கும் தொழில் பாதிக்கப்பட்டதாக அரசுக்குத் தகவல் வந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இந்தத் தொழிலில் பாதிப்பு ஏற்பட்டதாகத் தகவல் எதுவும் வரவில்லை. முன்னாள் பனை வெல்ல கூட்டுறவுச் சம்மேளனத்தின் மூலம் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு கடன் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக கடன் உதவி செய்யப்பட்டு வருகிறது.

கூட்டுறவு முறையில் காய்கறிகள் விற்பனை

*491. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு முறையில் காய்கறிகள் விற்பதற்கான ஏற்பாடுகள் செய்வதற்கு திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

கதர்-கிராமத் தொழில் வாரியம்

*492. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கதர்-கிராமத் தொழில் வாரியத்திலிருக்கின்ற உயர்மட்ட அதிகாரிகளின் **எண்ணிக்கையை சிக்கனத்தை முன்னிட்டு குறைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?**

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

LEGISLATIVE ... TRUTH ALONE TRIUMPHS